**தலைப்பு 194 – விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 யூன் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் 2.2. ஆம் பந்தி | 02 முதல் 05 ஆண்டுகள் வரையான கலத்துக்குரிய ரூபா 1,949,331 தொகையான 09 வைப்புக்கள் சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்களின் 571 ஆம் நிதிப்பிமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதி நாள் நிலவரப்படி, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அமைந்துள்ள காணி, எம்பிலிப்பிட்டிய தேசிய தலைமைத் துவ அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான 03 காணிகள் மற்றும் விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் மற்றும் விளையாட்டு மருத்துவ நிறுவனம் அமைந்துள்ள காணிகள் கையகப்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்ய ப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | அமைச்சின் கட்டிடம் அமைந் துள்ள காணி தொடர்பில் தற்போது திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்துடன் இணைந்து காணிகளை சுவீகரித்தல் இடம்பெற்று வருகின்றது.<br><br>தேசிய விளையாட்டு விஞ் ஞான நிறுவகத்தின் கட்டிடம் அமைந்துள்ள நிலமும், விளையாட்டு மருத்துவ நிறுவனம் அமைந்துள்ள கட்டிடத்துடன் கூடிய நிலமும் விளையாட்டு அபிவிருத்தித் | சொத்துக்களை சட்ட ரீதியாகக் கையேற்று அவற்றை நிதிக் கூற்றுக்களில் உள்ள டக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்துக்குச் சொந்தமான நிலமாகும்.<br><br>எம்பிலிபிட்டிய தேசிய தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்திற்குச் சொந்தமான காணியின் அளவீடுகள் நிறைவடைந்துள்ளதுடன், தயார்படுத்துவதற்கும் பரிசோதனை செய்வதற்கும் இரத்தினபுரி சிரேஷ்ட நில அளவையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) அமைச்சின் கீழ் உள்ள டயகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு வளாகம், தேசிய விளையாட்டு மன்றத்துக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடம், சிறு தொழில் அபிவிருத்தி பிரிவுக்கு சொந்தமான காணி, கட்டிடங்கள், மற்றும் இயந்திரங்கள், தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையத்திற்கு சொந்தமான் கட்டிடங்களில் காணப்படுகிழன்ற சொத்துக்களின் மதிப்பீட்டுப் பெறுமதி என்பன 2022 டிசம்பர் 13 தேதியிட்ட 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்கு வழிகாட்டுதல்களின் 8.2 இன் படி கணக்கு வைக்க அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | டயகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு வளாகம் அமைந்துள்ள காணியை அமைச்சுக்கு மாற்றுவதற்கு தேவையான அளவீடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அறிக்கை கிடைத்த பின்னர் இடமாற்றம் செய்வதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும் என ஹோமாகம பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>தேசிய விளையாட்டு மன்றம் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் நிலம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமானது என்பதுடன், காணி மற்றும் கட்டிடங்கள் இதுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை.<br><br>சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவிற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பிடுவது தொடர்பான நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தி ற்கு அறிவிக்கப்பட்டதுடன், அந்தச் சொத்துக்களை மதிப்பிடுவதற்கும் கணக்கீடு செய்வதற்கும் தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>தேசிய தலைமைத்துவ | சொத்துக்களை சட்ட ரீதியாகக் கையேற்று அவற்றை நிதிக் கூற்றுக்களில் உள்ள டக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேம்பாட்டு மையத்துக்குச் சொந்தமான கட்டிடத்தை மதிப்பிடுவதற்காக மதிப்பீ ட்டுத் திணைக்களத்துக்கு நிலத்தின் அளவைப்படம் மற்றும் திட்டம் தேவைப்படுவ தால், உரிய ஆவணங்களைப் பெற்று அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித் துள்ளது. | |
| (இ) | அமைச்சின் குழுப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ரூபா 11 மில்லியன் மொத்தக் கிரயப் பெறுமதியுடைய 02 வாகனங்களை சனாதிபதி அலுவலகத்தில் இருந்து கையகப்படுத்திய பின்னர், அந்த சொத்துக்களின் பெறுமதி அமைச்சின் கணக்குகளில் காட்டப்படவில்லை. | வாகனங்கள் - PB-9860 மற்றும் PE-7746 என்ற இலக்கங்களைக் கொண்ட இரண்டு டபள்கெப் வண்டி களை விரைவில் இந்த அமைச்சிடம் ஒப்படைக் குமாறு சனாதிபதி அலுவல கத்திற்கு கடிதம் அனுப்பப்பட் டுள்ளது. | சொத்துக்களை சட்ட ரீதியாகக் கையேற்று அவற்றை நிதிக் கூற்றுக்களில் உள்ள டக்க வேண்டும். |
| (ஈ) | இடம்பெற்று வரும் பணிகளிலுள்ள ரூபா 1,184 மில்லியன் பெறுமதியான 29 செயற்திட்டங்களில் தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங் கள் எவையென அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் மேற்கண்ட திட்டங்களில் ஏனைய அரசு நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு கையளிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு தேவையான சீராக்கல்களை அமைச்சு செய்திருக்கவில்லை. | அமைச்சின் இடம்பெற்று வரும் பணிகளில் உள்ளட ங்கிய பூர்த்தி செய்யப்பட்ட திட்ட ங்களை இனங்கண்டு, பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களாகக் கணக்கிட்டு உரிய நிறுவன ங்களிடம் முறைப்படி ஒப்படை ப்பதற்குத் தேவையான நடவடி க்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைச்சு பொறியாளரிடம் இருந்து தேவையான பரிந்துரைகளைப் பெற நாங்கள் ஏற்கனவே பணியாற்றி வருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | முடிக்கப்பட்ட செயற் திட்டங்களைக் கண்ட றிந்து அவ்றைக் கணக்கீடு செய்வற் கும் பிற நிறுவனங்க ளுக்கு கையளிக்க ப்பட வேண்டிய செயற்திட் டங்களை கணக்குளில் சீராக்கு வதற்கும் நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இலுள்ள விதிகளைப் பின்பற்றி சரியான முன்னறிவிப்பு மற்றும் பகுத்தறிவு அடிப்படையின்றி மதிப்பீடுகள் செய்யப்பட்டதன் காரணமாக, 20 செலவின விடயங்கள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 89 மில்லியன் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டி ருந்ததுடன், மேலும் 8 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிப்பீட்டி லிருந்து நி.பி. 66 மாற்றங்களின் கீழ், ஏனைய செலவின விடயங்களுக்காக மொத்த ஒதுக்கீடு அல்லது ஒதுக்கீட்டின் 50-100 சதவீத நிதி ஏற்பாடு குறைக்கப்பட்டும் 12 செலவினப் விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு 50-530 சதவீத வரம்பில் அதிகரிக்கப்பட்டும் இருந்தன. | தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கைகளின் படி செயற்பட்டமை, ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட போதிலும் செலவுகளின் தேவை ஏற்படாமை, போதிய ஒதுக்கீடுகள் இன்மை போன்றவை காரணமாக ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டு மாற்றீடுகள் செய்யப்பட்டு ள்ளன. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது தர்க்கரீதியான அடிப்படையில் சரியான முன்னறிவிப்புடன் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் 2023 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் மன்றத்துக்கு வழங்கப்பட்ட ரூபா 573 மில்லியன் மூலதன மானிய த்திற்கும் தேசிய இளைஞர் மன்றத்தினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகைக்கும் இடையே ரூபா 6 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஊடாக 2022 ஆம் ஆண்டில் இளைஞர் விவசாய கம்பனிகள் மற்றும் விவசாய முயற்சிகளை ஊக்குவிக்கும் திட்டத்திற்கான செலவினங்களைச் செய்வதற்கு வரவு செலவுத் திட்ட செலவின விடயம் 194-2-7-2-2201 இன் கீழ் அனுமதி வழங்கப்பட்டது. அதன் படி அம்பாறை மாவட்டச் செயலகத்தினால் கணக்கிடப்பட்ட ரூபா 6,567,873 செலவினம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கணக்குகளில் உள்ளடக்க ப்படவில்லை என்பது அவதானிக்கப்ப டுகிறது. அதை சரிசெய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி கள் அந்த நிறுவனங் களால் கணக்கீடு செய்யப்படுதல் குறித்து கண்காணித்தல் வண்டும். |

## 2.2 வைப்புகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட 02 முதல் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட முறையே மொத்த ரூபா 17 மில்லியன் மற்றும் ரூபா 1.6 மில்லியன் நிர்மாணச் செயற்திட்டங்கள் தொடர்பான பிடிகாசுத் தொகைகளை செலுத்துவதற்குள்ள கடப்பாட்டைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட செயற்திட்டத்தின் செயற்திட்ட ஆலோசகரின் பரிந்துரைகள் குறித்து, சம்பந்தப்பட்ட பிரிவுகளிடமிருந்து தகவல் வரவழைக்கப்பட்டுள்ளதுடன், தகவல் கிடைத்ததும், வைப்புச் செய்யப்பட்ட பணத்தை விடுவிக்க ஏற்பாடு செய்யப்படும். | பிடிகாசுத் தொகைகளை செலுத்துவதற்குள்ள கடப்பாட்டைக் கண்டறிந்து அவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்களை அணுகியிருக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் குருநாகல் மலியதேவ கல்லூரியில் வில்வித்தை வீச்சு மற்றும் துப்பாக்கி சுடுதல் மைதானத்தை 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக ரூபா 12 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 2018 மார்ச் 28 அன்று தனியார் ஒப்பந்தக்காரருக்கு வழங்கியி ருந்த போதிலும், இந்த செயற்திட்டத்திற்காக சாத்தியக்கூற்று ஆய்வு நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்பை விட ரூபா 4,225,610 தொகை வரியுடன் சேர்த்து மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு வருவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | சாத்தியக்கூற்று ஆய்வு நடத்தப்பட்டு வினைத்திறனாகவும் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடையக்கூடிய விதத்திலும் செயற் திட்டங்களை திட்ட மிடுதல் வேண்டும். மேலும், நிர்மாணச் செயற்திட்டங்கள் முறைப்படி முகாமைத்துவம் செய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு வளாகத்தை விளையாட்டுக் கல்விக்கூடமாகவும் சர்வதேச மைதானமாகவும் அபிவிருத்தி செய்வதற்காக 2017 முதல் 2022 வரை ரூபா 3,866 மில்லியன் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை அமைச்சு செய்திருந்ததுடன் அதில் ரூபா 606 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 487 மில்லியன் செலவில் கட்டப்பட்டிருந்த 400 மீட்டர் செயற்கை தடம் பல இடங்களில் சேதமடைந்து, ஓடுபாதையை பிரிக்கும் கோடுகள் மங்கி, அந்த பாதையில் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு இடையூறு ஏற்பட்டிருந்ததுடன் நிர்மாணமும் முறை யாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. . மேலும், சமையல் கூடத்தை சீரமைப்ப தற்கான ஒப்பந்தம் எதுவும் இல்லாமல் 2019 ஆம் ஆண்டில் அரசாங்க கட்டுமான நிறுவனமொன்றுக்கு ரூபா 5.4 மில்லியன் முற்பணமாக செலுத்தப்பட் டிருந்த போதிலும், அது தொடர்பான கட்டுமானப் பணிகள் நடைமுறைப்படுத்த ப்படாத காரணத்தால் அமைச்சினால் முற்பணத் தொகையை மீளப்பெற முடிந்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிர்மாணச் செயற் திட்டங்கள் முறை ப்படி முகாமைத்து வம் செய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 அன்று தனியார் நிறுவனமான டெக்னோமெடிக்ஸ் இன்டர்நெஷனல் நிறுவனத்திடமிருந்து ரூபா 249 மில்லியனுக்கு மனித செயலாற்றல் ஆய்வகத்திற்கான உபகரணங்களை வழங்கல் செய்து, நிறுவி, ஒப்படைத்து, பயிற்சியளித்து பராமரித்துச் செல்வதற்காக அந்த நிறுவனத்திற்கும் விளையாட்டு மருத்துவ நிறுவனத்திற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அதற்காக கிரய பிரதிபலன்கள் தொடர்பான எந்த பகுப்பாய்வும் செய்யப்பட்டிருக்கவில்லை.<br>சம்பந்தப்பட்ட நிறுவனம் 2023 ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் கருவிகளை மாத்திரம் நிறுவியிருந்த போதிலும், ஆய்வகத்தின் செயல்பாடு கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரர் 2021 நவம்பர் 16 | மனித செயலாற்றல் ஆய்வக த்தின் செயற்பாடுகளை முறை யாக முன்னெடுப்பதற்கு தேவை யான அனைத்து நடவடிக்கை களையும் விளையாட்டு மருத் துவ நிறுவனம் மேற்கொண்டுள் ளதுடன் எதிர்காலத்திலும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள விளையாட்டு மருத்துவ நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.<br>சம்பந்தப்பட்ட தரப்பினரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களால் திட்டம் தாமதமா னதால் தாமதக் கட்டணத்தை வசூலிக்க முடியவில்லை. | கிரய பிரதிபலன் தொடர்பான பகுப் பாய்வு செய்யப்பட்டு திட்டங்கள் தொடங் கப்பட வேண்டும். செலவிடப்பட்ட பண த்திற்கான பெறும தியை பெற்றுக் கொள்வதற்காக உடனடியாக வழங் குனருடன் பேச்சுவா ர்த்தை நடத்தி ஏற்றுக் கொள்ள முடியாத தாமதங்க ளுக்கு தாமதக் கட்டணம் வசூலிக் கப்பட வேண்டும். |

இலிருந்து எட்டு வாரங்களுக்குள் உபகரணங்களை நிறுவ வேண்டியிருந்த போதிலும், 13 மாதங்கள் தாமதத்திற்குப் பிறகு உபகரணங்கள் நிறுவப்பட்டி ருந்தன. ஒப்பந்த நிபந்தனைகளின் 26.1 படி வாரத்திற்கு 1 சதவீதம் தாமதக் கட்டணமாக அதிகபட்சம் 10 சதவீதம் அதாவது ரூபா 25 மில்லியன் தொகை வசூலிக்க முடியுமான போதிலும், அது தொடர்பில் ஆய்ந்தறிந்து அமைச்சு தாமதக் கட்டணத்தை வசூலித்திருக்க வில்லை.

### 3.2 செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விளையாட்டு அமைச்சுக்கு சொந்தமான 34.5 ஹெக்டேர் காணியில் நிர்மாணிக்க உத்தேசித்திருந்த உயர விளையாட்டு வளாகத்தை நிர்மாணிக்கும் திட்டத்திற் கான கடன் திட்டமிடல் கட்டணமாக 264,492.34 யூரோக்கள் அதாவது ரூபா 51 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அத்திட்டம் இடைநிறுத்தப்பட்டமையினால் 2021 ஆம் ஆண்டில், அதற்காகச் செலவிடப்பட்ட மொத்தச் செலவும் பயனற்றுப் போயிருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டில், இந்த ஒப்பந்தக்காரரும் யூரோ 23 மில்லியன் இழப்பீட்டுத் தொகைக்கு விண்ணப்பித்தி ருந்துடன், அதற்காக அமைச்சு சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியிருந்தது. | நிதி அமைச்சரின் 11.06.2020 தேதியிட்ட AMA/20/0822/204/ 080 ஆம் இலக்க அமைச்சர வைப் பத்திரத்தின்படி, இந்தத் திட்டம் தொடர்வதால் நாட்டின் கடன் சுமை அதிகரிக்கலாம் என்பதனால் கடன் வசதிக் கட்டணமாக யூரோ 264,492.34 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்வது அதிக பலனைத் தருவதாக அறிவிக்கப்பட்டிருந் தது. | செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறை வேற்றும் வகையில் திட்ட மிடப்பட வேண்டு மென்பதுடன், இழப்பீட்டு கோரிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் களின்படி செயற் பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விளையாட்டு மருத்துவ நிறுவகத்தில் கதிரியக்க நிபுணர் ஒருவர் இல்லாமல், நிதி அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையால் அனுமதி | 2016 ஆம் ஆண்டில், விளையாட்டு மருத்துவக் நிறுவகத்தில் கதிரியக்க வியல் பிரிவை நிறுவும் நோக்கத்திற்காக எக்ஸ்ரே இயந்திரம் கொள்வனவு செய்த | ஒரு சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப் பட்டு சொத்துக்களை வாங்க வேண்டும் என்பதுடன் வாங்கிய |

| | | |
|---|---|---|
| வழங்கப்படாமை காரணமாக ரூபா 3 மில்லியன் பெறுமதியான Mobile X-Ray இயந்திரம், ரூபா 1.1 மில்லியன் பெறுமதியான Radiation Protection Accessories Set உபகரணங்கள், ரூபா 4.3 மில்லியன் பெறுமதியான எக்ஸ்ரே டேபிள்கள் மற்றும் X-Ray Digitl Film Imaging System உள்ளிட்ட ரூபா 1.6 மில்லியன் செலவில் தயாரிக்கப்பட்ட X அறை ஆகியவை அவை கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு முதல் முறையே 07 ஆண்டுகள், 06 ஆண்டுகள் மற்றும் 02 ஆண்டுகளுக்கு மேலாக செயலற்ற நிலையில் இருந்தன. | போதே கதிரியக்க நிபுணரை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத் திடம் அனுமதி கோரப்பட்டது. ஆனால் நிறுவனத்தில் பல பதவிகளை நீக்கிய பின்னர், 31/08/2023 அன்று கதிரியக்க வியலாளர் பதவி உட்பட மேலும் 03 பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கியது.<br><br>அந்த ஒப்புதலுடன், ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டுமென்று வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி ஒரு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளிற்காக 14/12/2023 அன்று உள்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. | உபகரணங்களைப் பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறைச் செயலாக்கத்தில் உள்ள சிக்கல்களுடன் கூடிய நிலைமைகளைத் தீர்ப்பதற்காக 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம் திருத்தப்பட்டு நாளதுவரைப்படுத்தல் நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள விளையாட்டுச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக விளையாட்டு, தொழில்நுட்பம், சட்டம் மற்றும் பல்வேறு துறைகளில் அறிவாற்றல் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன், அக்குழு சம்பந்தப்பட்ட நிறுவன ங்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களுடன் கலந்தா லோசித்து, திருத்தப்பட்ட விளையாட்டு மசோதா வைத் தயாரித்துள்ளது. இது மேலதிக பணிகளு க்காக 29.11.2023 அன்று சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | விளையாட்டுச் சட்டம் துரிதமாக திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அனைத்து தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் அவற்றைச் சேர்ந்த விளையாட்டுப் பயிற்சியாளர்களின் திறன் மனப்பான்மையை வளர்த்து அவர்களுக்கு பயிற்சியாளர் பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல் விளையாட்டு விஞ்ஞான மன்றத்தின் முக்கியப் பணிகளில் ஒன்றாக காணப்பட்ட போதிலும், கணக்காய்வு தேதியின்படி பதிவு செய்யப்பட்ட 66 சங்கங்களில் 21 விளையாட்டு சங்கங்களுக்குரிய 2,067 பயிற்சியாளர்களுக்கு மட்டுமே பயிற்சியாளர் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பபட்டிருந்தன. மீதமுள்ள 45 விளையாட்டு சங்கங்களின் பயிற்சியாளர்கள் விளையாட்டு விஞ்ஞான மன்றத்தில் பதிவு செய்யாதிருப்பினும், அவர்கள் விளையாட்டுப் பயிற்சியையும் மேற்கொள்வதுடன் விளையாட்டு விஞ்ஞான மன்றத்தில் பயிற்சியாளர் பதிவுச் சான்றிதழைப் பெறாத பயிற்சியாளர்கள் தங்கள் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனக் கூறப்பட்ட போதிலும், விளையாட்டு பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான பொறுப்பு மற்றும் சட்ட அதிகாரங்கள், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தால் செய்யப்படவில்லை. | முக்கிய விளையாட்டுப் பயிற்சியாளர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு பயிற்சியாளர் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. | பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான சட்ட ரீதியான அதிகாரத்தை தேசிய விளையா ட்டு விஞ்ஞான நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், ரூபா 199,460 தொகையான இடர் கடன் மீதி மற்றும் ரூபா 8,750 தொகையான விழா முன்பணக் கடன் நிலுவை கொண்ட ஊழியர் ஒருவரினதும் ரூபா 129,855 தொகையான இடர் கடன் மீதி கொண்ட மற்றொரு ஊழியரினதும் பதவி வறிதாக்கப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டிய இடர் கடன் மற்றும் விழா முற்பணம் ஆகியவற்றை அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. இது தவிர, 05 முதல் 10 ஆண்டுகள் வரை நிலுவையாகக் காணபப்பட்ட மற்றொரு கடன் மீதியான ரூபா 26,567 தொகை வசூலிக்கப் படாமல் இருந்தது. | கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. | கடன் மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு, தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் உள்ள மின்பிறப்பாக்கி அறைத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகையிலிருந்து ரூபா 15 மில்லியனும், சமையலறை மற்றும் சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தின் புனரமைப்புத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியனும் கடுகஸ்தோட்டை புனித அந்தோணியார் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை செப்பணிடுவதற்காக வழங்கப்பட்ட ரூபா வேலை ஆரம்பித் தல் முற்பணம் ஆகியவற்றை அறவிடு வதற்கு அமைச்சு தவறியிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | முற்பணங்களை முறையாகவும் தாமதமின்றியும் அறவிடுதல் வேண்டும். |

4. **மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது..

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 டிசம்பர் 31 நிலவரப்படி, அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள சிற்றளவு வர்த்தக அபிவிருத்திப் பிரிவு, தலைமைத்துவ பயிற்சி தேசிய நிலையம், தேசிய விளையாட்டுக்கள் நிறுவகம், விளையாட்டு மருத்துவ நிறுவகம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றில் 30 சிரேஷ்ட நிலை வெற்றிடங்களும், 51 மூன்றாம் நிலை வெற்றிடங்களும், 116 இரண்டாம் நிலை வெற்றிடங்களும், 53 முதன்மை நிலை வெற்றிடங்களும் உள்ளிட்ட மொத்தம் 253 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றுள் அமைச்சின் செயலாற்றலையும் விளையாட்டுத் துறையையும் பெரிதும் பாதிக்கக் கூடிய வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் 11 பயிற்சி | தற்போதைய கொள்கைத் தீர்மானத்தின் காரணமாக ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய ஒருங்கிணைந்த சேவைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிர்வாக அமைச்சுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்புகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். | தேவைகளைக் கருத்திற் கொண்டு பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்/அபிவிருத் தியாளர் பதவிகள் மற்றும் 02 அலுவலக உதவியாளர் பதவிகள் மேலதிகமாகக் காணப்பட்டன.